2014 ஜூலை 17]
169—

அங்கன்வாடி மையக் கட்டடம்

*28595—திரு. கார்த்திக் தொண்டைமான்:

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வாராப்பூர் ஊராட்சி, சுந்தநேறிப்பட்டியில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தொகுதி, வாராப்பூர் ஊராட்சி, சுந்தநேறிப்பட்டியில் அங்கன்வாடி மையம் 25–4–2012 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட சர்வே எண் 289/5–ல் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்தின் அனுமதி பெற்று, விரைவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துன்பமற்ற பகலும், இன்பம் உள்ள இரவுமே உண்மையான விடுதலை தேசம் என்கிறார்கள் மேலை நாட்டு அறிஞர்கள். அதற்கு ஆதாரமாக உலக வரைபடத்தில் திகழும் ஒரே மாநிலம் நம் தமிழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை, எளிய குடிசைகளிலும் இன்ப தீபம் எரிகிறது. எரிகிற தீபத்தை ஏற்றி வைத்த தாயே, உங்கள் திருவடி வணங்கி மகிழ்கிறேன்.

அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் தந்தமைக்கு, புதுக்கோட்டை தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் அனு அனுவாக எனது நன்றியைப் பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

170—

சிறப்பு முகாம்

***7910—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களுக்கென சிறப்பு முகாம்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பம் செய்தவர்களில், குடும்ப அட்டை பெற தகுதி பெற்றவர்களுக்கு இரண்டு மாதத்திற்குள் புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சென்னை மாவட்டத்தில் மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமையிலும், ஏனைய மாவட்டங்களில் மாதத்தின் இரண்டாம் வெள்ளிக்கிழமையிலும் நடத்தப்படும் குடும்ப அட்டைதாரர்கள் குறைதீர் முகாமில் மனுக்கள் பெறப்பட்டு, கால வரம்பிற்குள் தீர்வு செய்யப்படுகின்றது. ஏற்கெனவே, மாதந்தோறும் பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாலும், தகுதியுள்ள மனுதாரர்களுக்குக் குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருவதாலும், நிலுவை மனுக்கள்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், புதிய குடும்ப அட்டைகளுக்காக சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டிய அவசியம் எழவில்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.